முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் I பரீட்சை – 2023 யூலை

## (101) நிதிக் கணக்கீடு

(Financial Accounting)

2023-08-26
காலை
[9.00 – 12.00]

பக்கங்கள் : 10
வினாக்கள் : 06

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்)**:**
  - (1) ***காலம் :*** *03 மணித்தியாலம்*
  - (2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***
  - (3) *உங்களுக்குத் தரப்பட்டுள்ள* ***விடைப்புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியிலேயே விடையளித்தல்*** *வேண்டும்.*
  - (4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் மேற்கொண்ட எடுகோள்கள் ஏதாவது இருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*
  - (5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*
  - (6) *வரைவிலக்கணங்களுடன்கூடிய* ***செயல் வினைச்சொல் செவ்வை நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***வினைச்சொல்லைக்*** *கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  - (7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

*இல. **1.1** இலிருந்து **1.10** வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தை உமது விடைப்புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக.*

**1.1** கீழ்வருவனவற்றுள் சரியான கூற்றைத் தெரிவு செய்க:

(1) நிகழ்வுகள் என்பது கணக்கீட்டுச் செயன்முறையின் கணக்கீட்டு வெளியீடு ஆகும்.

(2) தொடர்புடைமை என்பது நிதித் தகவல்களின் ஒரு அடிப்படையான தரம்சார்ந்த பண்பியல்பாகும்.

(3) வருமானம் என்பது நிதி நிலைக் கூற்றின் ஒரு மூலகம் (element) ஆகும்.

(4) முகாமைத்துவக் கணக்கீடானது வரலாற்று ரீதியான நிதித் தகவல்களை மாத்திரம் வழங்குகிறது.

**1.2** உரிமம் ஒன்றின் இலாபம் / (நட்டத்தை) கணிப்பிடுவதற்குப் பயன்படுத்தக்கூடிய சரியான சமன்பாட்டை கீழ்வருவனவற்றிலிருந்து தெரிவு செய்க:

(1) இலாபம்/(நட்டம்) = ஆரம்ப நிகரச் சொத்துகள் - இறுதி நிகரச் சொத்துகள்.

(2) இலாபம்/(நட்டம்) = இறுதி நிகரச் சொத்துகள் - ஆரம்ப நிகரச் சொத்துகள் - மேலதிக மூலதனம் + எடுப்பனவுகள்.

(3) இலாபம்/(நட்டம்) = இறுதி நிகரச் சொத்துகள் - ஆரம்ப நிகரச் சொத்துகள் - எடுப்பனவுகள் + மேலதிக மூலதனம்.

(4) இலாபம்/(நட்டம்) = ஆரம்ப நிகரச் சொத்துகள் - இறுதி நிகரச் சொத்துகள் - மேலதிக மூலதனம் + எடுப்பனவுகள்.

**1.3** காசு பெறப்பட்டதா, இல்லையா என்பதைப் பொருட்படுத்தாது வருமானம் /வருவாய் ஆனது குறித்த கணக்கீட்டுக் காலப்பகுதியில் ஏற்பிசைவு செய்யப்படுகிறது. இதனுடன் தொடர்புடைய கணக்கீட்டு எண்ணக்கரு:

(1) தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு. (2) பொருத்தப்பாட்டு எண்ணக்கரு.

(3) அட்டுறு எண்ணக்கரு. (4) உரிம (அலகுசார்) எண்ணக்கரு.

**1.4** கீழ்வரும் தகவல்கள் ஒரு தனியுடமை வியாபாரமான **ராம் டிரேடர்ஸ் இன்** 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் கணக்கேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன:

| | ரூபா |
|---|---|
| 2023 மார்ச் 31 இல் மொத்தச் சொத்துகள் | 8,400,000 |
| 2022 ஏப்ரல் 01 இல் மூலதனம் | 2,000,000 |
| ஆண்டின்போது உள்ளிடப்பட்ட மேலதிக மூலதனம் | 1,000,000 |
| ஆண்டின்போதான எடுப்பனவுகள் | 500,000 |
| ஆண்டிற்கான இலாபம் | 2,400,000 |

மேற்படி தகவல்களின் அடிப்படையில், 2023 மார்ச் 31 இலான உரிமையாண்மை (மூலதனம்):

(1) ரூபா 3,000,000/-. (2) ரூபா 3,500,000/-. (3) ரூபா 4,400,000/-. (4) ரூபா 4,900,000/-.

**1.5** உரிமையாளர் (வணிகத்திலிருந்து) காசு எடுக்கும்போது, அது கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படுத்தும் சரியான தாக்கத்தை கீழ்வருவனவற்றிலிருந்து தெரிவு செய்க:

(1) சொத்துகளில் (Assets) அதிகரிப்பு மற்றும் பரிப்புகளில் (Liabilities) குறைவு.

(2) சொத்துகளில் குறைவு மற்றும் உரிமையாண்மையில் குறைவு.

(3) சொத்துகளில் அதிகரிப்பு மற்றும் பரிப்புகளில் அதிகரிப்பு.

(4) சொத்துகளில் குறைவு மற்றும் உரிமையாண்மையில் அதிகரிப்பு.

**1.6** கணக்கீடானது பல்வேறு சூழற் காரணிகளால் தாக்கத்திற்குள்ளாவதுடன் அவற்றை PESTEL பகுப்பாய்வைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யலாம். பின்வருவனவற்றுள் எதனை PESTEL பகுப்பாய்விலுள்ள சூழற் (E) காரணிகளின் கீழ் வகைப்படுத்தலாம்?

(1) புதிய அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு ஏற்ப இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் அறிமுகம்.

(2) உள்நாட்டு இறைவரிச் சட்டத்திற்கு செய்யப்பட்ட சமீபத்திய திருத்தங்கள்.

(3) தரவுப் பகுப்பாய்வுக்கான செயற்கை நுண்ணறிவின் அறிமுகம்.

(4) தொழிற்றுறை நிபுணர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட கார்பன் அடிச்சுவடு (Carbon footprint) மட்டம்.

**1.7** கீழ்வரும் எந்தப் பேரேட்டுக் கணக்கினை நிதி நிலைக் கூற்றில் நடைமுறையல்லாச் சொத்தொன்றாக வகைப்படுத்தலாம்?

(1) வியாபார வருமதிகள்.

(2) அலுவலக வேலைகளுக்குப் பயன்படுத்தப்படும் கணினிகள்.

(3) முற்கொடுப்பனவுகள்.

(4) இறுதித் தொக்கு.

**1.8** **தரு டிரேடர்ஸ்** 2021 ஏப்ரல் 01 இல் ரூபா 6,000,000/- இற்கு இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்தது. வணிகத்தின் கொள்கையானது ஆண்டிற்கு 20% இல் குறைந்து செல்லும் மீதி முறையைப் பயன்படுத்தி இயந்திரத்தைத் தேய்மானம் செய்வதாகும். 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தேய்மானக் கட்டணமாக அமைவது:

(1) ரூபா 768,000/-. (2) ரூபா 960,000/-. (3) ரூபா 1,200,000/-. (4) ரூபா 1,688,000/-.

**1.9** கடன் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட பொருள்களை அதனை வழங்கியவருக்கு திருப்பி அனுப்புவதற்காக கொள்வனவாளர் பயன்படுத்தும் சரியான மூல ஆவணத்தைத் தெரிவுசெய்க:

(1) வரவுக் (Debit) குறிப்பு. (2) செலவுக் (Credit) குறிப்பு.

(3) கொள்வனவுக் கட்டளை. (4) நாட்குறிப்பேட்டு உறுதிச்சீட்டு.

**1.10** **தனிது** என்பவர் ரூபா 1,500,000/- பெறுமதியான லொறியை அவரது வணிகத்திற்கு மேலதிக மூலதனமாக உள்ளிட்டுள்ளார். இந்த ஊடுசெயல் தொடர்பில் கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படும் சரியான தாக்கத்தை கீழ்வருவனவற்றிலிருந்து தெரிவு செய்க:

| | சொத்துகள் (ரூபா) | = | மூலதனம் (உரிமையாண்மை) (ரூபா) | + பரிப்புகள் (ரூபா) |
|---|---|---|---|---|
| (1) | +1,500,000 | = | - | +1,500,000 |
| (2) | -1,500,000 | = | - | -1,500,000 |
| (3) | -1,500,000 | = | -1,500,000 | - |
| (4) | +1,500,000 | = | +1,500,000 | - |

*கீழே* **1.11** *தொடக்கம்* **1.15** *வரையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும்* ***சரியானதா*** *அல்லது* ***தவறானதா*** *எனக் குறிப்பிடுக. உமது விடையை (சரியானது / தவறானது) உரிய வினா இலக்கத்துடன் விடைப்புத்தகத்தில் குறிப்பிடுக.*

**1.11** உரிமம் ஒன்று, வணிகத்தின் பாவனைக்காக காசு அடிப்படையில் காணி ஒன்றைக் கொள்வனவு செய்யுமாயின், அந்த உரிமத்தின் சொத்துகளில் எவ்வித மாற்றமும் ஏற்படாது.

**1.12** கடனடிப்படையிலான ஆதனம், பொறி மற்றும் உபகரணக் கொள்வனவைப் பதிவு செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்ற மூல ஆவணம் கொள்வனவு விலைப்பட்டியல் (purchase invoice) ஆகும்.

**1.13** மோசடிகள், வழுக்கள் மற்றும் மாற்றல்களை கண்டுபிடிக்க உதவுவதற்காக வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்படுகிறது.

**1.14** வருமானம் என்பது உரிமத்தின் உரிமையாளரால் பங்களிக்கப்பட்டவை தவிர உரிமையாண்மையில் அதிகரிப்பொன்றை ஏற்படுத்துகின்ற சொத்துகளில் அதிகரிப்பு அல்லது பரிப்புகளின் குறைவு ஆகும்.

**1.15** தொடர்ந்தியங்கும் என்ற எடுகோள் எண்ணக்கருவின்படி, உரிமம் ஒன்று வரையறுக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்கு மாத்திரம் தொடர்ந்தும் இயங்கும் என்ற எடுகோளின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன.

**1.16** தொடக்கம் **1.20** *வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை உங்களது விடைப்புத்தகத்திலே உரிய வினா இலக்கத்திற்கு எதிரே எழுதுக.*

**1.16** நிதிக் கணக்கீட்டின் இரண்டு (02) நோக்கங்களைக் குறிப்பிடுக.

**1.17** "காசுக் கழிவுகள் (Cash Discount)" மற்றும் "வியாபாரக் கழிவுகள் (Trade Discount)" ஆகிய வற்றுக்கிடையிலான வேறுபாட்டைச் சுருக்கமாக விபரிக்குக.

**1.18** "தோற்றத்திலும் பார்க்க கருத்து மேலானது (Substance over Form)" என்ற எண்ணக்கருவைச் சுருக்கமாக விபரிக்குக.

**1.19** தொழில்சார் ஒழுக்கநெறிக் கோட்பாடுகளின் கீழ், "தொழில்சார் ஆற்றல் (Professional Competence)" என்னும் பதத்தைச் சுருக்கமாக விபரிக்குக.

**1.20** கணினிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமைகளுக்கு நகர்வதற்கான இரண்டு (02) காரணங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## <u>பகுதி B</u>

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

**அக்மல் டிரேடர்ஸ்** என்பது **அக்மல்** என்பவருக்குச் சொந்தமான ஒரு சில்லறை வணிகமாகும். 2023 மார்ச் 31 இல் வணிகத்தின் பரீட்சை மீதி இணங்கவில்லை. வித்தியாசம் ஆனது தொங்கற் கணக்கிற்கு மாற்றப்பட்டு வரைவுக் கணக்குகள் தயாரிக்கப்பட்டன. வரைவுக் கணக்குகளின்படி, 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிகர இலாபம் ரூபா 1,875,000/- ஆகப் பதிவு செய்யப்பட்டது. **அக்மல் டிரேடர்ஸ்** வியாபார வருமதிகள் மற்றும் வியாபார சென்மதிகளுக்காக கட்டுப்பாட்டுக் கணக்குகளைப் பேணுகிறது.

கீழ்வரும் வழுக்களும் விடுபாடுகளும் பின்னர் இனங்காணப்பட்டன:

(1) 2023 மார்ச் மாதத்திற்கான மின்சாரச் செலவினம் ரூபா 35,000/- ஆனது மின்சாரச் செலவினக் கணக்கில் ரூபா 53,000/- ஆக வரவுப் பதிவு (debited) செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செலவுப் பதிவானது (credit entry) சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(2) 2023 மார்ச் மாதத்திற்கான ரூபா 135,000/- வாடகை ஏற்பாடொன்று தொடர்பான இரட்டைப் பதிவு, சம்பந்தப்பட்ட கணக்கேடுகளில் இரு தடவைகள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

(3) விற்பனை நாளேட்டு மொத்தம் ரூபா 180,000/- இனால் குறைத்துப் பதியப்பட்டிருந்தது.

(4) வங்கியால் வசூலிக்கப்பட்ட வங்கி மேலதிகப்பற்று வட்டி ரூபா 2,500/- ஆனது வட்டி வருமானக் கணக்கில் செலவுப் பதிவு (credited) செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இது காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(5) 2023 சனவரி 01 இல் ரூபா 150,000/- பெறுமதியான கணினியொன்றின் கொள்வனவானது பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புக் கணக்கில் வரவுப் பதிவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இது காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது. கணினிகள் நேர்கோட்டு அடிப்படையில் கிரயத்தில் ஆண்டிற்கு 20% இல் தேய்மானம் செய்யப்படுகின்றன.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

(a) மேற்படி வழுக்களைத் திருத்துவதற்கன நாட்குறிப்பேட்டுப் பதிவுகளைத் **தயாரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) **அக்மல் டிரேடர்ஸின்** 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சீராக்கப்பட்ட நிகர இலாபத்தைக் **கணிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

**சக்தி கொங்கிறீட் வேலைகள்** என்பது கொங்கிறீட் பொருள்களைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள ஒரு நிறுவனமாகும். 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **சக்தி கொங்கிறீட் வேலைகள்** நிறுவனத்தின் கணக்கேடுகளிலிருந்து கீழ்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன:

| விபரம் | ரூபா |
|---|---|
| மூலப்பொருள் இருப்பு – 2022 ஏப்ரல் 01 இல் | 650,000 |
| மூலப்பொருள் கொள்வனவுகள் | 4,250,000 |
| புத்துருவாகும் வேலைகள் - 2022 ஏப்ரல் 01 இல் (முதன்மைக் கிரயத்தில் மதிப்பிடப்பட்டது) | 150,000 |
| மூலப்பொருளின் உள்வந்த வண்டிக்கூலி | 25,000 |
| நேர் கூலிகள் | 1,200,000 |
| தொழிற்சாலை முகாமையாளரின் சம்பளம் | 625,000 |
| வாடகை | 300,000 |
| நீர் | 50,000 |
| மின்சாரம் | 820,000 |
| இயந்திரப் பழுதுபார்ப்புகள் | 105,000 |
| பொறி மற்றும் இயந்திரம் மீதான தேய்மானம் | 120,000 |
| மோட்டார் லொறி மீதான தேய்மானம் | 220,000 |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) 2023 மார்ச் 31 இல் இறுதித் தொக்கு மீதிகள் பின்வருமாறு மதிப்பிடப்பட்டன:

| விபரம் | ரூபா |
|---|---|
| மூலப்பொருள் இருப்பு (கிரயத்தில்) | 585,000 |
| புத்துருவாகும் வேலைகள் (முதன்மைக் கிரயத்தில் மதிப்பிடப்பட்டது) | 235,000 |

(2) சகல பொறி மற்றும் இயந்திரங்களும் கொங்கிறீட் பொருள்களைத் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் அதே வேளை மோட்டார் லொறியானது வாடிக்கையாளர்களுக்கு பொருள்களை விநியோகிப்பதற்காக வணிகத்தினால் பயன்படுத்தப்படுகிறது.

(3) கீழ்வரும் செலவினங்கள் பின்வருமாறு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்:

| செலவினம் | தொழிற்சாலை | அலுவலகம் |
|---|---|---|
| மின்சாரம் | 75% | 25% |
| நீர் | 90% | 10% |
| வாடகை | 80% | 20% |

(4) தயாரிக்கப்பட்ட கொங்கிறீட் பொருள்கள், உற்பத்திக் கிரயத்தில் 18% இலாப எல்லை வைத்து வியாபாரப் பிரிவுக்கு மாற்றப்படுகின்றன.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **சக்தி கொங்கிறீட் வேலைகள்** நிறுவனத்தின் உற்பத்திக் கிரயக் கூற்றைத் (உற்பத்திக் கணக்கு) **தயாரிக்குக**. (10 புள்ளிகள்)

## வினா 04

**லசந்த டிரேடர்ஸ்** என்பது ரூபா 2,800,000/- இனை காசாக முதலீடு செய்து 2022 ஏப்ரல் 01 இல் **லசந்த** என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட ஒரு தனியுடமை வியாபாரமாகும்.

கீழ்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கின் (காசேடு) பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது:

**காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு (காசேடு)**

| **பெறுவனவுகள்** | **வரவு (ரூபா)** | **கொடுப்பனவுகள்** | **செலவு (ரூபா)** |
|---|---|---|---|
| ஆரம்ப மூலதன முதலீடு | 2,800,000 | காசுக் கொள்வனவுகள் | 800,000 |
| காசு விற்பனைகள் | 4,200,000 | வியாபாரக் கடன்கொடுத்தோருக்கான கொடுப்பனவுகள் | 3,800,000 |
| வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்தான பெறுவனவுகள் | 1,800,000 | மின்சாரம் | 185,000 |
| | | சில்லறைக் காசுக்கு (petty cash) மாற்றப்பட்ட தொகை | 120,000 |
| | | அலுவலக உபகரணத்தின் கொள்வனவு (2023 சனவரி 01 இல் கொள்வனவு செய்யப்பட்டது) | 500,000 |
| | | சம்பளங்களும் கூலிகளும் | 1,800,000 |
| | | மீதி மு.கொ.செ. | 1,595,000 |
| | **8,800,000** | | **8,800,000** |
| மீதி கீ.கொ.வ. | 1,595,000 | | |

(2) 2023 மார்ச் 31 இல் வருமதிகளும் சென்மதிகளும் கீழ்வருமாறு:

| | **ரூபா** |
|---|---|
| வியாபார கடன்பட்டோர் | 1,450,000 |
| வியாபாரக் கடன்கொடுத்தோர் | 1,200,000 |
| செலுத்த வேண்டிய மின்சாரக் கட்டணம் | 19,000 |

(3) வியாபாரத்தின் கொள்கையானது அலுவலக உபகரணங்களை நேர்கோட்டு அடிப்படையில் கிரயத்தில் ஆண்டிற்கு 20% இல் தேய்மானம் செய்வதாகும்.

(4) ஆண்டின் காலப்பகுதியில் சில்லறைக் காசுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்கள் கீழ்வருமாறு:

(i) பயணச் செலவு : ரூபா 50,000/-.

(ii) ஊழியர் சேமநலன் : ரூபா 25,000/-.

(iii) காகிதாதிகள் : ரூபா 35,000/-.

(5) 2023 மார்ச் 31 இல் எவ்வித தொக்குகளும் இல்லை.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

2023 மார்ச் 31 இல் **லசந்த டிரேடர்ஸின்** பரீட்சை மீதியைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 05

(A) 2023 மார்ச் 31 இல் **இஷாகர் டிரேடர்ஸ்** இன் வங்கிக் கூற்றானது ரூபா 427,400/- என்ற சாதகமான மீதியொன்றைக் காட்டிய அதே வேளை காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கானது ரூபா 336,000/- என்ற வரவு (debit) மீதியைக் (சாதகமான) காட்டியது.

வணிகத்தின் உதவிக் கணக்காளர், வங்கிக் கூற்று மீதிக்கும் காசேட்டு மீதிக்குமிடையில் காணப்படும் இந்த வித்தியாசத்திற்கான காரணங்களாக பின்வருவனவற்றை இனங்கண்டுள்ளார்:

(1) வங்கியிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கடனுக்கான கடன் தவணைக் கட்டணம் ரூபா 25,000/- இனை வங்கி கழித்திருந்தது. இது காசேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(2) வழங்கப்பட்ட நேரடி வங்கி உறுதிப்படுத்தலுக்கான வங்கிக் கட்டணம் ரூபா 1,500/- ஆனது காசேட்டில் கவனத்தில் கொள்ளப்படவில்லை.

(3) பெப்ரவரி மாதத்திற்கான மேலதிகப்பற்று வட்டி ரூபா 12,100/- ஆனது 2023 மார்ச் மாதம் வங்கியால் அறவிடப்பட்டிருந்தது. இது காசேட்டில் பதிவு செய்யப்படவில்லை.

(4) கிடைத்த நிலையான வைப்புக்கான வட்டி ரூபா 25,000/- ஆனது வங்கிக் கூற்றுக்கு வரவு வைக்கப்பட்டது (credited) ஆயினும் இது தொடர்பில் காசேட்டில் கவனம் செலுத்தப்பட வில்லை.

(5) வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 120,000/- பெறுமதியான ஒரு காசோலை 2023 மார்ச் 31 வரை தேறியிருக்கவில்லை.

(6) 2023 மார்ச் 30 இல் விநியோகிக்கப்பட்ட ரூபா 225,000/- பெறுமதியான ஒரு காசோலை 2023 மார்ச் 31 வரை கொடுப்பனவுக்காக வங்கியில் சமர்ப்பிக்கப்படவில்லை.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக**:

(a) சீராக்கப்பட்ட காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு (காசேடு). (03 புள்ளிகள்)

(b) 2023 மார்ச் 31 இலான வங்கிக் கணக்கிணக்கக் கூற்று. (02 புள்ளிகள்)

(B) தனியுடமை வியாபாரமான **ஹசங்க டிரேடர்ஸின்** ஐந்து (5) ஊடுசெயல்கள் கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படுத்திய தாக்கங்கள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன:

| | சொத்துகள் | | | | | | | = | உரிமையாண்மை (மூலதனம்) | + | பரிப்புக்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மோட்டார் லொறி | + | தொக்கு | + | வியாபாரக் கடன் பட்டோர் | + | காசு | | | | வியாபாரக் கடன் கொடுத்தோர் |
| (1) | + 750,000 | | | | | | + 1,250,000 | = | + 2,000,000 | | |
| (2) | | | + 950,000 | | | | | = | | | + 950,000 |
| (3) | | | (60,000) | | + 90,000 | | | = | + 30,000 | | |
| (4) | | | | | | | (150,000) | = | (150,000) | | |
| (5) | | | | | | | (200,000) | = | | | (200,000) |

**நீங்கள் செய்ய வேண்டியது:**

மேற்படி கணக்கீட்டுச் சமன்பாட்டின் (1) தொடக்கம் (5) வரையுள்ள ஒவ்வொரு நிரைக்கும் சாத்தியமான ஊடுசெயல்களை **அடையாளம் காண்க.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# <u>பகுதி C</u>

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 06

**இமந்தி பியூட்டி சென்டர்** என்பது **இமந்தி** என்பவருக்குச் சொந்தமான ஒரு தனியுடமை வியாபாரமாகும். 2023 மார்ச் 31 இலான **இமந்தி பியூட்டி சென்டர்** இன் பரீட்சை மீதி கீழ்வருமாறு:

**இமந்தி பியூட்டி சென்டர்**

**2023 மார்ச் 31 இலான பரீட்சை மீதி** *(ரூபா '000)*

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில்: | | |
| அழகுபடுத்தும் உபகரணம் | 3,500 | |
| தளபாடமும் பொருத்துகளும் | 5,200 | |
| திரண்ட தேய்மானம் - 2022 ஏப்ரல் 01 இல்: | | |
| அழகுபடுத்தும் உபகரணம் | | 625 |
| தளபாடமும் பொருத்துகளும் | | 400 |
| விற்பனைகள் | | 74,100 |
| கொள்வனவுகள் | 52,000 | |
| தொக்கு – 2022 ஏப்ரல் 01 இல் | 1,750 | |
| வியாபார வருமதிகள் | 3,500 | |
| வியாபார சென்மதிகள் | | 1,050 |
| காசுக் கையிருப்பு | 75 | |
| வங்கிக் கடன் | | 560 |
| பாதுகாப்புச் செலவினங்கள் | 350 | |
| மின்சாரம் | 1,650 | |
| சம்பளங்களும் கூலிகளும் | 7,000 | |
| வங்கிக் கடன் வட்டி | 200 | |
| செலுத்திய அலுவலக வாடகை | 2,600 | |
| போக்குவரத்து | 300 | |
| நீர் | 150 | |
| 2022 ஏப்ரல் 01 இல் மூலதனக் கணக்கு | | 1,540 |
| **மொத்தம்** | **78,275** | **78,275** |

கீழ்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) 2023 மார்ச் 31 இல் கிரயத்தில் மதிப்பிடப்பட்ட இறுதித் தொக்கு ரூபா 6,750,000/-.

(2) 2023 மார்ச் 31 இல், **இமந்தியின்** நண்பர்களில் ஒருவர் **இமந்தியின் வணிகத்திற்கு** ரூபா 500,000/- பெறுமதியான தளபாடங்களை வழங்கியிருந்தார். இந்தத் தொகையினை 2023 ஏப்ரலில் தீர்ப்பனவு செய்வதற்கு **இமந்தி** இணங்கியிருந்தார். இந்த ஊடுசெயல் கணக்கேடுகளில் பதிவு செய்யப்படவில்லை.

(3) வணிகத்தின் கொள்கையானது கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் கீழ்வருமாறு தேய்மானம் செய்வதாகும்:

| | | |
|---|---|---|
| அழகுபடுத்தும் உபகரணம் | : | ஆண்டிற்கு 25% |
| தளபாடமும் பொருத்துகளும் | : | ஆண்டிற்கு 20% |

(4) 2022 ஏப்ரல் 01 இல், **இமந்தி** ஒரு புதிய வாடகை உடன்படிக்கையை செய்து கொண்டுள்ளார். அந்த உடன்படிக்கையின்படி, மாதாந்த வாடகை ரூபா 200,000/-. 2023 ஏப்ரல் மாதத்திற்கான வாடகையும்கூட மார்ச் மாதத்தில் செலுத்தப்பட்டிருந்தது.

(5) திறந்த சந்தையில் அழகுசாதனப் பொருள்கள் பற்றாக்குறையாக இருந்த காரணத்தால், **இமந்தி** அவளது தாய்லாந்திற்கான தனிப்பட்ட பயணத்தின்போது 2023 மார்ச் 20 இல் அவளுடைய தனிப்பட்ட கடன் அட்டையைப் பயன்படுத்தி சில உருப்படிகளைக் கொள்வனவு செய்திருந்தார். தாய்லாந்திலிருந்து வாங்கிவரப்பட்ட உருப்படிகளின் கிரயம் ரூபா 900,000/- என்பதுடன் அந்தப் பெறுமதியை வணிகத்திற்கான மேலதிக மூலதனமாகச் சேர்ப்பதற்கு அவர் இணங்கியிருந்தார். எவ்வாறாயினும், இந்த விடயம் தொடர்பான எவ்வித ஊடுசெயல்களும் **இமந்தியின் வணிகத்தினுடைய** கணக்கேடுகளில் பதிவு செய்யப்படவில்லை. மேலும், இந்த இருப்பானது 2023 மார்ச் மாதத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்தது. விற்பனை தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் கணக்கேடுகளில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தன.

(6) **இமந்தி, வரையறுக்கப்பட்ட ABC கம்பனியிடமிருந்து** வர வேண்டியிருந்த ரூபா 155,000/- மீதியை அறவிடமுடியாக் கடனாக பதிவழிப்புச் செய்வதற்குத் தீர்மானித்திருந்தார்.

(7) 2023 மார்ச் மாதத்திற்கான மின்சாரக் கட்டணம் ரூபா 78,000/- ஆனது 2023 மார்ச் 31 இலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

பின்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று. (11 புள்ளிகள்)

(b) 2023 மார்ச் 31 இலான நிதி நிலைக் கூற்று. (09 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக் குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |